சொல்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதன் கீழ் எழுப்பக்கூடிய விவாதம் இந்த அவையின் நேரத்தை வீணக்கக் கூடியதாய், அவையின் கண்ணியத்தைக் குறைக்கக்கூடியதாய் இருந்தால் பேரவைத்தலைவர் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பளித்தால் அது அவைக் குறிப்பில் ஏருது. இதற்கு நம் விதிமுறைகளில் இடம் இருக்கிறது. இனி அடுத்து அவை முன்னவர் அவர்கள் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள்.

(5) அரசினர் தீர்மானம்.

நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலையை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவதுபற்றிய முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுவது குறித்து

THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN : Mr. Speaker, Sir, under Rule 244 of the Legislative Assembly Rules, I move—

"That the relevant rules of procedure be suspended and the House do now proceed to take up the resolution of the Hon. Chief Minister in regard to inclusion of the second mine cut at Neyveli in the draft Fifth Plan ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறேம். அவற்றை எடுத்துக் கொண்ட பின் முதல்வர் அவர்களுடைய தீர்மானத்தைக் கொண்டுவரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

(6) அரசினர் தனித் தீர்மானம்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத் திட்டத்தையும் ஆயிரம் மெகோ வாட் அனல் மின் உற்பத்தித் திட்டத்தையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்களே.

"தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி, நாள்தோறும் பெருகி வரும் மின் சக்தி தேவையை நிறைவு செய்யவில்லையெனில் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். தமிழ்நாட்டில் நீர் மின் வாய்ப்புக்கள் முழுவதுமாக பயன்படுத்தப் பட்டுவிட்ட நிலையில், அனல் மின் நிலையங்களை உருவாக்குவது இன்றியமையாத